முருகப்பெருமான் துணை

**மகான் ஆனாய நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.06.2022, ஞாயிற்றுக்கிழமை

1. யோகராசனே அரங்கா வாழ்க
உயிர்கொலை நீக்கி காக்க
யுகமக்களை நோக்கி சன்மார்க்க
உயர் நெறி அருளும் தேசிகா வாழ்க
2. வாழ்கயென அரங்கன் பெருமை கூறி
வல்லமைபட சுபகிருது மிதுன திங்கள்
தாழ்விலா விய திகதி கதிர் வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 12 நாள், 26.06.2022 ஞாயிற்றுக்கிழமை)
தக்கபடி அருளாசி தன்னை
3. தன்னையே ஆனாய நாயனாரும்
தரணியே பாதுகாப்புற உரைப்பேன்
அண்ணலாக அரங்கன் காட்டும்
அழிவை போக்கும் சைவ நெறியை
4. நெறியை கலியுகம் தானும்
நீதி நெறியாக ஏற்று
அறம் குன்றா வாழ்வை காண
அகிலமே பின்பற்றித் தொடர
5. தொடரவே அமைதி பாதுகாப்பு
தேசமெங்கிலும் வந்தடையும்
இடரான தீவினை அனைத்தும்
இவ்வுலகை விட்டு விலகும்
6. விலகுமே மனமாச்சர்யங்களும்
விடாது தொடரும் மாயை சிக்கலும்
கலகமான இனமத பேதம்
கட்சி வகுப்பு எனும் பிளவுகளும்
7. பிளவுகளும் விலகி இனிதே
பேருலகம் அமைதி நிதானம்
சலனமிலா மக்கள் படையை
சாந்த சொரூபில் காணக் கூடும்
8. கூடாத களவு கையூட்டு
கொள்கை வடிவில் திருட்டுளன
ஈடேறா இனி எல்லாம் விலகி
எங்கும் நேருமை தருமமென
9. என பாதுகாப்பு கொண்ட
இயம்பிடுவேன் ஞான சக்தி பரவி
ஞான உலகமாக மாறும்
ஞான தேசிகன் தலைமை ஏற்று

10. ஏற்று ஞானவழித் தொடர
எல்லோரும் ஞானிகளெனும்
ஆற்றல் மாற்றம் கூடி
அறிவிப்பேன் ஞானவான் நிறைந்த

11. நிறைந்த ஞான ஆட்சியை
நிலமதனில் படைத்திடுவர்
குறைவிலா அரங்கன் வழியே
குவலயத்தை மாற்றி அமைக்கும்
அருளாசி முற்றே

—சுபம்—